# ஆச்சாரியாரின் சர்வாதிகார வெறி.

## தமிழர்கள் அறிவிலிகளா?

(ஊர் வம்பு)

சென்னை சரணாகதி பிரதம மந்திரியார் தமது சகாக்களுடன் சேலத்தில் மது விலக்குப் பிரசாரம் செய்யவும் கள், சாராயம் மதுவகைகளை ஒழிக்கும் சிறந்த தொண்டை செய்வதற்காகவும் இம்மாதம் முதல் தேதி சேலம் வந்தார். இந்த ஜில்லாவின் பல பாகங்களிலும் சுற்றுப்பிரயாணம் செய்தார்கள். அவர்கள் சுற்றுப் பிரயாணங்களில் பல பொதுக் கூட்டங்களில் ஆச்சாரியார் பேசியிருக்கின்றார்.

அவர் ஓமலூர் பொதுக்கூட்டத்தில் கேட்ட கேள்விகளுக்குப் பின்வருமாறு பேசியிருப்பதாகத் தெரிகிறது.

ஹிந்தியைக் கண்டித்தும் எதிர்த்தும் பேசுபவர்கட்கு சிறிதாவது புத்தியிருக்கு மென்றிருந்தேன். அவர்கள் எல்லாரும் அறிவிலிகள் என்பதை இப்பொழுது அறிந்துகொண்டேன். இந்த அறிவிலிகள் எவ்வளவு தந்திகளும் கண்டனங்களும் எதிர்ப்புச் செய்திகளும் எனக்கு அனுப்பினாலும் நான் அதைப் பொருட்படுத்தப் போவதில்லை. என்று சொன்னதோடு இவைகளைக் குப்பை தொட்டியிலேயே போட்டுவிட்டு ஹிந்தியைக் கட்டாய பாடமாக வைக்கத்தான் போகின்றேன் என்றும் சொன்னாராம்.

இக்தப்படி ஆச்சாரியார் பேசியிருந்தால் இது எவ்வளவு ஆணவமும் அகம்பாவமுள்ள பேச்சென்பதை தமிழர்கள் நன்கு ஊன்றிகவனிக்கவேண்டும் "அற்பனுக்குவாழ்வு வந்தால் அர்த்தராத்திரியில் குடைபிடிப்பான்" என்று ஒரு பழமொழியுண்டு. இதைமெய்ப்பிக்கின்றார் பிரதம மந்திரி ஆச்சாரியார். சர்வாதிகார வெறி பிடித்து அலையும் பிரதம மந்திரி ஆச்சாரியாரே! ஹிந்தியை எதிர்ப்பவர்களெல்லாம் அறிவிலிகளா! ஹிந்தியைக் கட்டாய பாடமாக வைக்க முயலும் தாங்களும் தங்கள் கூட்டத்தார்களும் அறிவிலிகளா? யார் அறிவிலிகள்? என்பதை பிரதம மந்திரியார் என்ற மமதையின்றி, சர்வாதிகார வெறியின்றி சற்று சிந்தித்துக் கூறுங்கள்.

தாங்கள் ஹிந்தியைக் கட்டாயபாடமாக வைத்துவிட்டால் படிக்கவேண்டியது யார்? ஹிந்தி படிப்பு சொல்லிக்கொடுக்க வேண்டிய உபாத்தியார்கள்யார்? தங்கட்கு இன்னும் எத்தனை யுகங்கட்கு இந்தப் பிரதம மந்திரி உத்தியோகப்? ஹிந்தியால் தமிழ் மொழி பாதிக்கப்படாதென்பதற்கும் தமிழர்கள் ஆதிக்கம் அழிக்கப்படாதென்பதற்கும் இதுவரை தாங்கள் என்ன சமாதானம், ஆதாரம் காட்டினீர்கள்? பிரதமமந்திரிப்பதவி மமதையில் எது வேண்டுமானாலும் ஆணவமாகவும் அகம்பாவமாகவும் பேசத் துணியலாமா?

மதுவிலக்குப் பிரசார மறைவில் ஹிந்திப் பிரசார செய்வதும் ஹிந்திக்கு ஆதரவு தேடுவதும் எதற்காக? தங்கள் வக்கில் தந்திரங்களையும் பார்ப்பன சூழ்ச்சிகளையும் என்று விட்டொழிக்கின்றீர்களோ அன்றுதான் தாங்கள் மேன்மையடைய முடியும். தங்கட்கு வந்து குவியும் ஹிந்தி எதிர்ப்புக் கண்டனங்களையும் கட்டாய பாடமாக்கக் கூடாது என்ற தீர்மானங்களையும் குப்பைத் தொட்டியில் போட்டு விட்டு ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குவேன் என்று அகம்பாவமாகப் பேசும் ஆச்சாரியாரே! தங்கள் உத்திரவை மதித்துத்தான் ஆக வேண்டுமென்று எந்தத் தமிழரையாவது கட்டாயப்படுத்தத் தங்களால் முடியுமா? தங்கள் உத்திரவு பிரதம மந்திரியார் உத்திரவாகயிருக்கலாம். அதனாலென்ன? பொது ஜனங்கள் (தமிழர்கள்) எதிர்ப்பைத் தாங்கள் அலட்சியப்படுத்தினால் தங்கள் உத்திரவு தமிழர்களால் சிதைக்கப்பட்டு அழியாமல் என்ன செய்யும்? சட்டத்தையும் சர்க்கார் உத்திரவையும் மீறினால் என்ன வந்துவிடும்; சிறை தண்டனை வரலாம். நன்றாக சிறைவாசம் புரிய தமிழர்கட்கு மனோதிடம், வீரம் ஆண்மை உண்டுஎன்பதும்தமிழர்கள் தான் உங்களுக்கும் கற்றுக் கொடுத்தார்கள் என்பதும் நீங்கள் அறியாததல்ல. ஆரியர்கள் ஆட்சியில் தமிழர்கள் அடிமைப் படுத்தப் படுவதை இனியும் அறிவுடைமையோடு தமிழர்கள் சகித்துக்கொண்டிருக்க மாட்டார்கள் என்பதை பிரதம மந்திரி ஆச்சாரியார் அவர்கள் உணரவேண்டும். அல்லது வெகு சீக்கிரத்தில் உணரும்படி செய்யப்படபோகிறது. காங்கரஸ் கதர் வேடம் பூண்டு பூனைபோல் பொது மக்களை ஏமாற்றிய ஆச்சாரியார் இப்போது மந்திரி பதவி பெற்றதும் தமிழர்கள் மீது புலிபோல் பாய்கிறார். ஆச்சாரியாரே! உம்முடைய தீந்த உண்மைத் தோற்றம் எப்படியாவது வெளிப்பட்டுத்தானேயாகவேண்டும்? ஹிந்தியைக் கட்டாயபாடமாக்கக் கூடாது என்று எதிர்க்கும் தமிழர்களை "அறிவிலிகள்" என்று ஆச்சாரியாரேமனத்துணிவுடன் கூறுகின்றீர். உம்முடைய சர்வாதிகார போதை வெறியைப் போக்கவும் பிரதம மந்திரியார் பீடத்தை விட்டு விலக்கவும் ஆரியர்கள் ஆதிக்க அட்டகாசத்தையொடுக்கவும் தமிழர்கள் முன் வரப் போகிறார்கள் என்பது உறுதி.